பொங்கல் சிறப்பிதழ்

தங்கம்: 21 மங்கை: 5

ஜனவரி: 2021 ரூ.30/-

தங்கமங்கை

THANGAMANGAI TAMIL MONTHLY MAGAZINE

பார்போற்றும்
நாடாளும் பெண்கள்!

நுகர்வோர்
பாதுகாப்பு சட்டம்

பெண் என்றால்,
பேராற்றல்தானே!

வீட்டில் வியாபாரம்!
குறைந்த முதலீடு!
இரட்டிப்பு லாபம்!

தமிழ் ஆண்டு
தனியே எதற்கு?

வள்ளுவர் வழியில்
ஒரு வளர்ச்சிப் பணி!

தமிழரின்
திருமண
முறைகள்!

வகுப்புகளை
வடிவமைக்கிறோம்!
– அனிதா ராமன்



வகுப்புகளை வடிவமைக்கிறோம்!

✍ 'கோடு பண்ணு' அனிதா ராமன்

"பணி புரிவது மன நிறைவைத்தரவில்லை. நாம் ஏன் சுயமாக ஏதாவது செய்யக்கூடாது என்று பணியில் இருந்து விலகி விட்டேன். புதுமையாக செய்ய வேண்டும், என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, ஒப்பந்த அடிப்படையில் பணிகளை செய்யலாம் என்ற எண்ணம் பிறந்தது.

நான்கு ஆண்டுகள் பல நிறுவனப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து கொண்டிருந்த போது கொரோனா ஊரடங்கு: நிலைமை சீரடைந்தது,தனியாக நிறுவனம் அதுவும் அனைவரும் நம் செயல் அறிவை பயன்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் உதித்ததுதான் 'கோடு பண்ணு' (Codepannu) என்ற கணினி குறியீட்டு நிறுவனம்" என்று கூறிய அனிதா ராமன் பெங்களூருவில் வசிக்கிறார். பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் அதிக சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த வேலையை விட்டு புதிய நிறுவனம் ஏன் தொடங்க வேண்டும்? அதன் பணிகள் என்ன? உங்களுடைய படிப்பு, பூர்வீகம் என்ன என்று அனிதா ராமனிடம் பல்வேறு கேள்விகளை முன்வைத்தோம். இதோ அவரே பதிலளிக்கிறார்....

"என் பெயர் அனிதா, அப்பா பெயர் ராமன், அம்மா பெயர் லீலா. திருச்செந்தூர் பக்கத்தில் ஒரு கிராமம். இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டு தூத்துக்குடியில் தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தனர். அப்பா தமிழ்நாடு போக்குவரத்து துறையில் நடுத்துநராக பணிபுரிந்தவர். அம்மா குடும்ப தலைவி. என் உடன்பிறந்தவர்கள், ஒரு அண்ணன் மற்றும் ஒரு அக்கா, நான்தான் வீட்டின் கடைக்குட்டி. வீட்டில் பொருளாதார சிக்கல் இருந்தாலும், எங்களது அப்பா முடிந்த அளவிற்கு குடும்பத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மிகவும் தாராளமாக எங்களுக்கு வழங்கினார்.

நான் என் பள்ளிபடிப்பை "ஹோலி கிராஸ் ஆங்கிலோ இண்டியன் பள்ளியிலும், கல்லூரி படிப்பை திருந்செந்தூர் சிவந்தி ஆதித்தனார் பொறியியல் கல்லூரியில் இளநிலை பொறியாளர் (கணினி அறிவியல் பிரிவு) படிப்பையும் முடித்தேன்.

எனக்கு கூடை பந்தில் ஆர்வம் அதிகம். அதனால் பள்ளிப் போட்டிகளில் கலந்துகொண்டு மாவட்ட மற்றும் மாநில அளவில் என்னுடைய பங்களிப்பை அளித்தேன். கதை எழுதுவதிலும், கவிதை எழுதுவதிலும் ஆர்வம் அதிகம். மிகவும் பிடித்த விசயம், மற்றவர்களுக்கு ஏதாவது ஒன்றை கற்றுக்கொடுப்பது. அதனால் சிறுவயதில் இருந்து அருகில் உள்ள பிள்ளைகளுக்கு கணிதம், இயற்பியல் பாடங்களை கற்றுக் கொடுப்பது என் வழக்கம்.

வேலை தொடர்பாக பெங்களூர் சென்றேன். அங்கு ஆறு ஆண்டுகள் ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்தேன். பின்பு திருமணமாகி இரண்டு ஆண்டுகள் சிறிய இடைவெளி,கணவர் பெயர் தீபக் தேவராஜ். அவர் ஒரு தனியார் நிறுவனத்தில் கணக்காளராக பணிபுரிகிறார்,என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் பக்கபலமாக இருந்து வருகிறார். பின்பு மூன்று ஆண்டுகள் மறுபடியும் வேறு நிறுவனத்தில் பணிபுரிந்தேன். பணிபுரிந்து கொண்டு இருக்கும் போது இதைப்போன்று நிறுவனங்களில் பணி புரிவது எனக்கு பெரிய மனநிறைவை தரவில்லை. அதன் பிறகு நாம் ஏன் சுயமாக ஏதாவது செய்யக் கூடாது என்ற எண்ணம் பிறந்தது. முடிவு செய்த பிறகு, பணியிலிருந்து விலகி விட்டேன். ஏதாவது புதுமையாக செய்ய என்ற வேண்டும் எண்ணம் மட்டும் மனதில் இருந்து கொண்டே இருந்தது.

ஒரு நிறுவனம் ஆரம்பிக்க பணம் மற்றும் அனுபவம் தேவை. வேறு என்ன செய்யலாம் என்று சிந்தித்து தன்னுடைய திறமையை மூலதனமாகக் கொண்டு செயல்படும் ஒரு சுயதொழிலாக பிரிலேன்சர் என்ற முறையில் நிறுவனங்களுக்கு என்னுடைய பணிகளை செய்யலாம் என்று முடிவு எடுத்தேன்.இச்த முறையில் ஒரே நேரத்தில் பல நிறுவனங்களுடன் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குஒப்பந்த அடைப்படையில் பணியாற்றலாம். என்னுடைய தொழில் வளர்ச்சியை நோக்கி நான் எடுத்துவைக்கும் இரண்டாவது படிக்கட்டாய் இது அமைந்தது. இதை ஆரம்பித்த புதிதில் மிகவும் சவாலாகத்தான் இருந்தது, ஏனென்றால் என்னைப்பற்றி யாருக்கும் தெரியாது, அப்படியே தெரிந்தாலும் என்னை நம்பி எப்படி பணிகள் கொடுப்பார்கள் என்ற அய்யம் இருந்தது.

நான் வசிக்கும் பெங்களூருவில், சிறிய அளவில் தொழில் நுட்பத்துறையில் கால் பதித்து விட்டு பகுதிநேரமாக செய்யும் பணியாளர்கள் அதிகம் உள்ளனர். அது எனக்கு ஒரு மகிழ்ச்சியையும் உந்துதலையும் கொடுத்தது. இந்தத்துறையில் என்னை போன்ற பிரிலேன்சர்களின் தேவை அதிகமாய் இருந்தது. ஏனென்றால் அவர்களால் முழு நேர பணியாளர்களை அமர்த்தி பணி வழங்குவதில் பல சிக்கல்கள் உள்ளன. அதனால், என்னை போன்ற பிரிலேன்சர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சிறிய அளவிலான வேலைகளை கொடுத்து, அவர்கள் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இதுபோன்று பல நிறுவனங்களின் தொடர்பு கிடைத்ததால் நிறையப் பணிகள் கிடைத்தது. இதுபோன்று நான்கு ஆண்டுகள் ஓடிக் கொண்டிருந்த நிலையில் இந்த கொரோனா ஊரடங்கு ஆரம்பித்தது, இதில் நான் கண்ட மாற்றம், கல்வி நிறுவனங்கள் தங்கள் கல்வி முறையை செல்பேசி செயலிகளான ஜூம்,கூகுள் மீட் மூலமாக மாணவர்களுக்கு நேரலையில் வழங்கி புதுப்பித்துக் கொண்டிருந்தனர்..

சரி அதன்பிறகு என்ன செய்யத் தொடங்கினீர்கள்? என்று கேட்டபோது, அதற்கு அனிதா ராமன், கோடுபண்ணு (Codepannu) ஆரம்பம் என்றார். கோடு பண்ணு என்றால்

என்றதற்கு, மீண்டும் அவரே தொடர்ந்தார்.

"கணினி குறியீட்டு (Computer coding) சார்ந்த பல்வேறு படிப்புகளை கல்வி நிறுவனங்கள் ஆன்லைன் முறையில் கற்றுக்கொடுத்து கொண்டிருந்தன. இதில் வரவேற்கத்தக்கதாய் இருந்தாலும், தொகை மிக அதிகமாய் இருந்தது. இது அந்த வகுப்புக்கு ஏற்றதாய் இருந்தாலும், தொகை அதிகம் என்பதால் நடுத்தர வர்க்கத்தினருக்கு கணினி குறியீடு சார்ந்த வகுப்புகள் எட்டாக் கனியாக இருக்கிறது. எல்லா வகையான மக்களுக்கும் கிடைக்கும் வகையில் இல்லை என்பதை அறியத் துவங்கினேன்.

இத்தனை ஆண்டுகள் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிந்து அதன் மூலம் அறிந்த செயல் அறிவை மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஆழமாய் உதித்தது. எங்களைப் போன்று சிறிய கிராமத்தில் இருந்து வந்தவர்களுக்கும் இந்தப் படிப்பு பயன்பட வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பித்ததுதான் கோடு பண்ணு (Code pannu) என்ற ஒரு சிறிய நிறுவனம். இதன் முயற்சி என்னவென்றால், குறியீடு (coding) வகுப்பை இலவசமாக எங்களுடைய வலை ஒளி (YouTube) இல் காண முடியும். அந்த வகுப்பை பயின்ற பிறகு, பயின்றவர்கள் பயிற்சிகளை (Assignment) முடித்து எங்களுடைய வலைதள (website) பக்கத்தில் சமர்ப்பிக்கலாம். அதை நாங்கள் சரிபார்த்து பிழை இருப்பின் சரி செய்து, தேவைப்படின் அவர்களின் வளர்ச்சிக்கு மற்றும் சில (Assignment) வழங்குவோம். முதலில் இதை எந்த அளவு சரி வரும் என்ற யோசனை இருந்தது, பின்பு நண்பர்களின் வட்டாரம், அவர்களின் வட்டாரம் என்று இது அதிகம் பேருக்கு பயனுள்ளதாய் இருந்தது.

பின்பு எங்களுக்கு வகுப்பை பற்றி நல்ல நல்ல கருத்துகள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து பகிரப்பட்டன. இந்த ஊரடங்கு காலத்தில் பிள்ளைகள் தங்கள் திறனை நல்ல முறையில் மேம்படுத்திக்கொள்ள இது மிகவும் உதவியாக இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இத்தகைய கருத்துகள் எங்களுக்குள் மேலும் ஊக்கத்தை கொடுத்தது.

இதை நாங்கள் ஆரம்பித்த புதிதில் எளிய ஆங்கில முறையில் ஆரம்பித்தோம், பின்பு இதன் வரவேற்பை அறிந்து தமிழிலும் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டு கொண்டிருக்கிறோம். இதனால் அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் பிள்ளைகளும் இந்த வகுப்பு போய் சேரும் என்ற நம்பிக்கையில், தற்போது நாங்கள் பைதான் (PYTHON) மட்டுமே வகுப்பை மட்டுமே பதிவேற்றம் செய்கிறோம்.உலகில் மனிதர்கள் உரையாட பல மொழிகள் உள்ளன. கணினிக்கும் கட்டளைகள் பிறப்பிக்க சில மொழிகள்

"இன்று நாம் பயிலும் பைதான் (PYTHON) குறியீடு எதிர்கால சந்ததியினருக்கு அடிப்படை பட்டறிவை எங்களால் முடிந்தவரை எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு சிறிய முயற்சி என்கிறார் அனிதா ராமன்."

நகைச்சுவை

கணவன்:- இவ்வளவு சிரமப்பட்டு உங்க வீட்ல வேலை செய்றேனே, அதைப் பார்த்து உங்கப்பா என்ன சொன்னார்?

மனைவி :- பொங்கலுக்கு புது மிக்சியும், புது கிரைண்டரும் வாங்கி தர்றேன்னு சொன்னார்!

- இந்து குமரப்பன், விழுப்புரம்

உள்ளன. ஜாவா, சி++, பிளச்பி போன்ற ஒரு மொழிதான் பைதான்.

ஆனால் இது மட்டும் போதாது, தகவல் தொழில்நுட்பத்தை பொறுத்தவரை ஏராளமாய் உள்ளது. அதையும் ஒவ்வொன்றாக வடிவமைத்து வெளியிட முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. எங்களுடைய 2021 திட்டம் என்னவென்றால், இந்த வருட முடிவுக்குள் பல்வேறு வகையான வகுப்புகளை வடிவமைத்து வெளியிட வேண்டும் என்பதே" என்றவரிடம்,

குழந்தைகளுக்கு என்ன பயன்? இதனைப் பயில்வதால் என்ன நன்மை, இது எந்த அளவுக்கு அவர்கள் எதிர்காலத்துக்கு பயனுள்ளதாய் இருக்கும். இதனை படிப்பதால் என்னென்ன வேலை வாய்ப்புகள் உள்ளன? என்ற வினாக்களை எழுப்பினோம்.

அதற்கு அவர், " தற்போது எல்லா துறைகளிலும் தொழில் நுட்பத்துறை தன்னுடைய பங்களிப்பை அளித்து வருகிறது. நாம் எதை எடுத்தாலும் முதலில் எழுப்பும் கேள்வி, ஆன்லைன் வசதி உள்ளதா என்று, அந்த அளவு தொழில் நுட்ப துறை பங்காற்றி வருகிறது. படிப்பு, இசை, விளையாட்டு, பயண சீட்டு, வங்கிகள் இப்படி அனைத்துக்கும் தங்களுக்கு ஏற்றவாறு மென்பொருளை(Software) வடிவமைத்துக் கொள்கின்றனர். இதனால் நாளை மாணவர்கள் எந்த துறையில் பணிக்கு சென்றாலும், இந்த அடிப்படை கணினி குறியீடு (Computer Coding) மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

குறியீடு (coding) பற்றிய அடிப்படை அறிவு இருக்கும் பட்சத்தில், வலைதள பக்கத்திற்கும் கேட்கப்படும் விலை சரியானதா, நம்முடைய தேவைக்கு ஏற்றவாறு அவர்களால் வடிவமைக்க முடியுமா, அதற்கு தேவைப்படும் நேரம் சரியானதா என்ற பல விசயங்களுக்கு உதவியானதாய் இருக்கும். நாம் அன்றாடம் பயன்படுத்தும், முகநூல், (Facebook) வலைதள ஒளி (YouTube) போன்ற ஏராளமான செயலிகள் எவ்வாறு நமக்கு காணொலிகளை (Video) பரிந்துரை செய்கின்றன போன்ற ஏராளமான கேள்விகளுக்கான விடை இந்த அடிப்படை கணினி குறியீட்டின்(computer Coding) முறையில் புரிந்து கொள்ள முடியும். இதை தெரிந்துகொள்வதால், சமூக ஊடகங்களில் (Facebook, twitter, Instagram) சரியான முறையில் பயன்படுத்த மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதைப்பயின்று அனைவரும் இதே துறையில் வர வேண்டும் என்று இல்லை. நாம் பயன்படுத்தும் அனைத்திலும் தொழில்நுட்பம் கலந்து இருப்பதால், அதனை பற்றிய ஒரு அடிப்படை அறிவு இருப்பது நன்மையானதுதான்.நாங்கள் படிக்கும் கால கட்டத்தில் ஜாவா (JAVA) குறியீடு படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருந்தது, இப்போது பைதான் (PHYTHON) படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதுபோல இதை சுற்றும் பிள்ளைகள் வளர்ந்து வரும் கால கட்டத்தில் வேறு ஒரு புதிய கணினி குறியீட்டு மொழி (Computer coding) மேலோங்கி நிற்கும்.

ஏனென்றால் எவ்வளவு கணினி குறியீட்டு மொழி மாறினாலும், அதனுடைய அடிப்படை என்பது மாறாமல்தான் இருக்கும். எடுத்துக்காட்டாக நாம் பயன்படுத்தும் செல்பேசியில் எத்தனை புதுமைகள் வந்தாலும், நாம் ஒவ்வொரு முறையும் முதலில் இருந்து கற்று கொள்ளவில்லை. அடிப்படை என்பது அனைத்து செல்பேசிகளிலும் ஒன்றுதான். சில புது தொழில்நுட்ப செய்திகளை அறிந்து கொண்டால் போதுமானது. அதுபோலத்தான் இன்று நாம் பயிலும் பைதான் (PYTHON) குறியீடும். எதிர்கால சந்ததியினருக்கு அடிப்படை பட்டறிவை எங்களால் முடிந்தவரை எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு சிறிய முயற்சி" என்று கூறி நிறைவு செய்தார்.

அனிதா ராமனுக்கு நம் வாழ்த்துகளை கூறி விடை பெற்றோம்.

படச்செய்தி

கரூர் மாவட்ட பள்ளிக்கல்வித்துறை சுற்றுச்சூழல் மன்றம், வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி இணைந்து செயல்படுத்தும், தமிழ்நாட்டிலேயே முன்னோடி முதல் திட்டமான, ஊக்கத்தொகையுடன்கூடிய 'ஒரு மாணவர், ஒரு மரம்' என்ற வீட்டுக்குச் சென்று மரம் வளர்க்கும் திட்டம், இயற்கை ஆர்வலர்களின் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது. கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா.பெ.மகேஸ்வரி கலந்துகொண்டு, இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதில் நாகம்பள்ளி பஞ்சாயத்து தலைவர் தமிழ்மணி, கணக்குவேலம்பட்டி தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் வேலுமணி, கரூர் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் செ.ஜெரால்டு, ரோட்டரி கிளப் தலைவர் பாரதி, பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் அமுதா மற்றும் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.